செ.வெ.எண்: 31 நாள்: 12.01.2011

# பத்திரிக்கைச் செய்தி

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் ஆணையின் பேரில் அமைக்கப்பட்ட மாநில தூய்மைப் பணிபுரிவோர் நல வாரியத்தின் நான்காவது கூட்டம் மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் திருமதி ஆ.தமிழரசி அவர்கள் தலைமையின் கீழ் சென்னை தலைமைச் செயலக கூட்டரங்கில் இன்று (12.1.2011) நடைபெற்றது.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் தூய்மைப் பணிபுரிவோர் நல வாரியத்திற்கு ரூபாய் 3 கோடி ஒதுக்கப்பட்டுள்ள நிலையில் இவ்வாரியத்தில் 1,12,149 உறுப்பினர்கள் பதிவு செய்துள்ளனர். இதுவரை 30,247 குடும்பங்களுக்கு அடையாள அட்டை வழங்கப்பட்டுள்ளது. இதுவரை 2752 பயனாளிகளுக்கு 58 லட்சத்து 81 ஆயிரத்து 850 ரூபாய் உதவித்தொகையாக வழங்கப்பட்டுள்ளது. மேலும் அருந்ததியருக்கு வழங்கப்பட்டுள்ள 3% உள்ஒதுக்கீட்டின் விளைவாக இவ்வாண்டு 91 அருந்ததிய மாணவ, மாணவியர்களுக்கு மருத்துவக் கல்லூரியிலும், 1971 மாணவ, மாணவியருக்கு பொறியியல் கல்லூரியில் பயில இடம் கிடைத்துள்ளது. மேலும், இவ்வாண்டு 629 அருந்ததியர்களுக்கு பல்வேறு துறைகளில் பணிநியமனம் வழங்கப்பட்டுள்ளது. தூய்மை பணியாளர் மறுவாழ்வு திட்டத்தின் கீழ் 10,352 நபர்களுக்கு 1313.06 லட்சம் ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.

இன்றைய நல வாரிய கூட்டத்தில் வாரிய உறுப்பினர்கள் 2 நபர்களுக்கு திருமண உதவித்தொகையும், 4 நபர்களுக்கு கல்வி உதவித்தொகையும், விபத்தில் ஊனம் அடைந்த ஒரு நபருக்கு உதவித்தொகையும், இயற்கை மரண உதவி மற்றும் ஈமச்சடங்கு உதவியாக 4 நபர்களுக்கு உதவித்தொகையும் ஆகமொத்தம் 11 நபர்களுக்கு 1,70,500 ரூபாய் உதவித்தொகையாக மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் அவர்களால் வழங்கப்பட்டது.

மேலும், வாரியத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ள தொகையை முழுவதுமாக பயன்படுத்த உரிய நடவடிக்கைகளை விரைந்து எடுக்க வேண்டுமென அமைச்சரவர்கள் அதிகாரிகளுக்கு அறிவுரை வழங்கினார். இதற்கான நடவடிக்கைகளை விரைந்து எடுத்து இத்திட்டத்தின் முன்னேற்றம் குறித்து அடிக்கடி ஆய்வு செய்து அறிக்கை அரசுக்கு அனுப்ப வேண்டுமெனவும் அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. மேலும் நல வாரிய உறுப்பினர்களுக்கு என்னென்ன நலத்திட்டங்கள் வழங்கப்படுகிறது என்பதை விரிவாக வாரிய உறுப்பினர்களுக்கு விளக்கப்பட்டது. அவர்கள் தங்கள் பகுதியிலுள்ள தூய்மைப் பணிபுரிவோர் அனைவரையும் இத்திட்டத்தின் கீழ் பதிவு செய்து

அவர்களுக்கு அடையாள அட்டைகளை விரைவில் வழங்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென அமைச்சரவர்கள் அறிவுறுத்தினார்கள்.

இந்த வாரிய உறுப்பினர்களுக்கு திருமண உதவித்தொகை, மகப்பேறு உதவித் தொகை மற்றும் முதியோர் உதவித்தொகை ஆகியவை வழங்கப்படுகிறது. மேலும், விபத்தினால் ஏற்பட்டால் ரூபாய் 1 லட்சமும், விபத்தினால் ஊனம் ஏற்பட்டால் ரூபாய் 10 ஆயிரத்திலிருந்து 1 லட்சம் வரையும், இயற்கையான மரணத்திற்கு கூட ரூபாய் 15 ஆயிரம் உதவி தொகையும், மாணவ, மாணவியருக்கு படிப்புக்கேற்ப பல்வேறு உதவிதொகைகள் 10 வகுப்பிலிருந்து பட்ட மேற்படிப்பு முடிய, தொழிற்படிப்பு உட்பட வழங்கப்படுகிறது. இவ்வாறு சிறப்பான திட்டங்களை உள்ளடக்கிய இத்திட்டத்தினை மக்களிடம் கொண்டு சேர்க்க வேண்டிய கடமையை நல வாரிய உறுப்பினர்களுக்கும், அதிகாரிகளுக்கும் அமைச்சரவர்கள் எடுத்துரைத்தார்கள். மேலும் உறுப்பினர்களால் எழுப்பப்பட்ட பல்வேறு பிரச்சனைகள் குறித்து கேட்டறிந்த அமைச்சரவர்கள் அவர்களின் கோரிக்கைகளை துறையின் மூலமாகவும், அல்லது மற்ற துறைகள் தொடர்பான கோரிக்கைகளை, அந்தந்த துறைகளுக்கு அனுப்பி வைத்தும் உரிய நடவடிக்கையினை உடனே எடுத்து அறிக்கை சமர்பிக்குமாறு அதிகாரிகளுக்கு ஆணையிட்டார்.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை முதன்மைச் செயலாளர் திரு.விஸ்வநாத் ஷெகாவ்கர்,இ.ஆ.ப., ஆதிதிராவிடர் நலத்துறை ஆணையர் திரு பொ. சிவசங்கரன்,இ.ஆ.ப., பழங்குடியினர் நலத்துறை இயக்குநர் திரு உ.இரவீந்திரன்,இ.வ.ப., தாட்கோ மேலாண்மை இயக்குநர் திரு சா.விஜயராஜ்குமார், இ,ஆ,ப., ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை, பள்ளிக்கல்வித்துறை, மக்கள் நல்வாழ்வுத்துறை ஆகிய துறைகளின் உயரதிகாரிகள் மற்றும் அலுவல் சார்ந்த உறுப்பினர்கள் மற்றும் அலுவல் சாரா உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சரின்
சிறப்பு நேர்முக உதவியாளர்.

2/2

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
சென்னை